**கவனிக்க.-** 2015.01.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி I, பகுதி I : தொகுதி (IIஅ), பகுதி III மற்றும் பகுதி (IVஅ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் அச்சீட்டாளர் மற்றும் பிரசுரிப்பாளர்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள 2012 ஆம் வருடத்தின் காலாண்டின் (ஏப்பிறல்-யூன்) அச்சிடப்பட்டுள்ள புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1901 - 2015 පෙබරවාරි මස 06 වැනි සිකුරාදා - 2015.02.06

*1901 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 108 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 129 |


**கவனிக்க.-** தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்) சட்டமூலம் 2015, சனவரி மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

**இலங்கை வான்படை**

அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் ஆண்/பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன :

(அ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு
(ஆ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு
(இ) உபகரணப் பிரிவு
(ஈ) வைத்தியப் பிரிவு
(உ) பல் வைத்தியப் பிரிவு
(ஊ) பரிபாலன நீதிப் பிரிவு
(எ) பரிபாலன இசைப் பிரிவு

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

**(அ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு.- தொழில்நுட்ப பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர) :**

*அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட முழுநேர இயந்திரவியல்/மோட்டார் வாகன பொறியியல் பிஎஸ்சி பட்டச் சான்றிதழ் அல்லது 3 வருட முழுநேர இயந்திர வியல் பொறியியலில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பெற்ற தொழில்நுட்ப சான்றிதழ் (என்டீடி) அல்லது இலங்கை உயர்தொழில்நுட்ப கல்வி நிலையத்தில் 3 1/2 வருட முழுநேர இயந்திரவியல் பொறியியல் பெற்ற உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ) அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பெற்ற தொழில்நுட்பவியல் டிப்ளோமா

**(ஆ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு.- இலத்திரனியல் பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர) :**

குறைந்தபட்சம் 4 வருட இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் BSc அல்லது 4 வருட பௌதிக விஞ்ஞானம் (மேஜர்) உடன் இலத்திரனியல்/தொலைத் தொடர்பு பிரதான பாடமாக BSc பட்டம் அல்லது 3 வருட BSc பௌதிக விஞ்ஞான பட்டத்துடன் இலத்திரனியல் தொலைத்தொடர்பானது பிரதான பாடமாக அல்லது 3 வருட டிப்ளோமா இலத்திர னியல்/தொலைத் தொடர்பு பொறியியல்

**வலையமைப்பு பரிபாலகர் அதிகாரி - ஆண்/பெண் (நிரந்தர) :**

4 வருட கணினி தொடர்பான பிரிவில் BSc பொறியியல் பட்டம் அல்லது 3 வருட கணினி தொடர்பான பிரிவில் BSc பட்டம் அல்லது கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடமாக BSc பட்டம் அல்லது HND அல்லது NIBM டிப்ளோமா அல்லது வலையமைப்பு பரிபாலகர் சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் அனுபவத்துடன்

**மென்பொருள் விருத்தியாளர் - ஆண்/பெண் (நிரந்தர) :**

4 வருட BSc பொறியியல் பட்டம், கணினி தொடர்பான பிரிவில் அல்லது 3 வருட BSc பட்டம், கணினி தொடர்பான பிரிவில் அல்லது BSc பட்டத்துடன் கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடம் அல்லது HND அல்லது என் ஐபிஎம் டிப்ளோமா அல்லது மென்பொருள் விருத்தி யாளர் சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் அனுபவத்துடன்

**தகவல்/பாதுகாப்பு விசேட நிபுணர் :**

4 வருட BSc பொறியியல் பட்டம் கணினி தொடர்பான பிரிவில் அல்லது 3 வருட BSc பட்டம் கணினி தொடர்பான பிரிவில் அல்லது BSc பட்டத்துடன் கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடம் அல்லது HND அல்லது NIBM டிப்ளோமா தகவல்/பாதுகாப்பு விசேட நிபுணர் சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் அனுபவத்துடன்

**இணையதள வடிவமைப்பாளர் :**

4 வருட BSc கணினி பொறியியல்/தகவல் தொழில்நுட்பம்/கணினி விஞ்ஞானம் அல்லது 3 வருட BSc கணினி பொறியியல்/தகவல் தொழில்நுட்பம்/கணினி விஞ்ஞானம் அல்லது 3 வருட தகவல் தொழில்நுட்பம் அல்லது பிரதான பாடமாக கணினி விஞ்ஞானத்தில் பிஎஸ்சி பட்டம் அல்லது HND அல்லது NIBM டிப்ளோமா அல்லது தகைமையுடன் குறைந்த பட்சம் 1 வருட அனுபவம்

**குறிப்பு.**- சகல விண்ணப்பதாரர்களும் எழுத்து, செயன் முறைப் பரீட்சைகளுக்கு உட்படுத்தப்படுவர்.

சகல பிஎஸ்சி பட்டங்களும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களினின்றும் பெற்றிருத்தல்

**உபகரணப் பிரிவு.- உணவக முகாமையாளர் - ஆண் (நிரந்தர)**

ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா பட்டச் சான்றிதழ் அல்லது தேசிய/சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விருந்தோம்பல் உபசரணைக் கல்வியில் 4 தரத்திலும் முழுநேர அடிப்படைப் பயிற்சி பெற்றிருப்பதுடன் நட்சத்திர ஹோட்டலில் போசனசாலையும் உணவு முகாமைத் துவம் சம்பந்தமாக 2 வருட அதிகார அனுபவம் இருத்தல் வேண்டும்.

**ஆடைத் தொழில்நுட்ப பொறியியலாளர் - ஆண் (நிரந்தர)**

தொழில்நுட்பம் அல்லது பொறியியல் விஞ்ஞானத்தில் பிஎஸ்சி பட்டம் பெற்றிருத்தல், ஆடையணிகள் மற்றும் உடை தொடர்பாக டிப்ளோமா பெற்றிருத்தில் விசேட தகைமை யாகக் கருதப்படும். ஆடையணிகள் மற்றும் உடை தொடர்பாக 5 வருட சேவை அனுபவம் மற்றும் 3 வருடம் பயிற்று விப்பாளராக அல்லது அறிவுரையாளராக இருத்தல் ; ஆடையணிகளின் தயாரிப்பு மற்றும் விருத்தி செய்தலில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(பட்டதாரிக்கு 33 வயதை விடவும் டிப்ளோமா உரியவருக்கு 26 வயதை விடவும் 2015, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும்.)

**வைத்தியப் பிரிவு.- வைத்திய அதிகாரி - ஆண் (நிரந்தர)**

**ப்ளயிட் லெப்டினன்ட்** - ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகத்தில் பெற்ற எம்பிபிஎஸ் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையில் பதிவுசெய்திருத்தல் வேண்டும்.

**பயிற்சி பெறும் (Pre-Intern) வைத்தியர்.- ஆண் (நிரந்தர)**

எம்பிபிஎஸ் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை களுடன் இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற (Sri Lanka) அல்லது அதற்குச் சமமான பட்டம், தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 5 ஆண்டு சேவைக் காலத்திற்குள் ERPM பரீட்சையில் சித்திபெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்பதாரிகள் 5 வருட சேவைக்குப் பின் நிறுத்தப்படுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ப்ளயின் ஒபிசர் தரத்தில் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப்படுவதோடு ERPM பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை வைத்திய சபையின் நிரந்தர சான்றிதழின் பின் ப்ளயிட் லெப்டினன்ட் தரத்திற்கு கொண்டுவருவது பற்றி கவனத்தில் கொள்ளப் படும்.

**(இ) பல் வைத்தியப் பிரிவு.- பல் அறுவை மருத்துவர் - ஆண்/ பெண் (நிரந்தர/தொண்டர்)**

**ப்ளயிட் லெப்டினன்ட்** - பிடீஎஸ் அல்லது அதற்குச் சமனான தகைமையுடன் எஸ்எல்எம்சி அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**பல் வைத்திய மாணவர் - ஆண்/பெண் (நிரந்தர)**

**பைலட் ஒபீசர்** - பிடீஎஸ் 2 ஆவது பகுதியில் பூர்த்தியடைந்த 3 ஆம் வருட ஆரம்பத்தில் இருக்கும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்

**ப்ளையிங் ஒபீசர்** - இறுதி பிடீஎஸ் முதற்கட்டம் முழுமையான பிறகு இறுதி வருடம் பிடீஎஸ் பயிலும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ப்ளையிட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக தேர்ந்தெடுக்கப்படுவதோடு அவர்கள் அன்றிலிருந்து பத்து வருடங்கள் கட்டாய சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் பல் வைத்திய மாணவர்கள் இறுதி வருடம் முடிவடையும் வரை வான்படையிலிருந்து விடுவிக்கப் படுவார்கள். பல் வைத்திய பிடீஎஸ் பட்டத்தினை முடித்த பின்னும் வைத்திய சபையில் பதிவாகியதும் அவர்கள் பிளையிட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தரப்படுத்தப் படுவார்கள்.

கல்வித் தொழிற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

பல் வைத்திய மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் வருடங் களைக் காட்டக்கூடிய ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கவும்.

**(ஈ) பரிபாலன நீதிப் பிரிவு.- நீதி அதிகாரி- ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்)**

நீதிப்பட்டம் பெற்றிருத்தலுடன் 1 வருட வழக்கு தொடுக்கும் அனுபவம். எம்ஓயூ உம் ஆவணம் தொடர்புபடுத்தும் திறமையும்

**பரிபாலன இசைப் பிரிவு.- இசைக் கலைஞர் - ஆண் (நிரந்தர)**

குறைந்தபட்சம் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

றோயல் கல்லூரியில் அல்லது திரின்ரி கல்லூரியில் தரம் 5 வரை அல்லது அதற்கு மேலும் அல்லது அதற்கு சமனான தகைமை இருத்தல் வேண்டும்.

இசைக்குழுவில் பயிற்றுவித்தல் மற்றும் இசைக் குழுவின ரோடு இணைந்து செயற்படும் ஆற்றல் மேலும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களைக் கையாளும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

மற்றும்

குறைந்தபட்சம் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கை லலிதகலா நிறுவனத்தில் பெற்ற கலைப்பட்டம் அல்லது இலங்கை தேசிய நடன மற்றும் சங்கீத இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது இந்தியாவில் பாத்மகாண்ட சங்கீத பீடத்தில் இரண்டாம் தரத்தில் அல்லது விஷாரதா பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களைப் பயிற்றுவிக்கும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களை இசைக்கும் ஆற்றல், சுருதி லயம் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

**3. வேறு தகைமைகள் :**

(அ) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) குடியியல் நிலை.- விவாகமானவர்/விவாகமாகாதவர்;

(இ) பால்.- ஆண்/பெண் :

(ஈ) வயது.- 2015, ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு தொழில்நுட்ப, இலத்திரனியல் பொறியியல், பல் வைத்திய மாணவர் உபகரண (உணவக முகாமையாளர்) 18-30 வரை இருத்தல் வேண்டும் ;

வைத்திய, பல் வைத்திய பரிபாலன, நீதி பரிபாலன இசைப் பிரிவு, 18-35 வரை இருத்தல் வேண்டும் ;

(உ) உயரம்.- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்
பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் ;

(ஊ) நிறை.- பிஎம்ஐ = உடற்பருமன் சுட்டி இலங்கை வான் படைக்கு அமைவாக இருத்தல் வேண்டும் ;

(எ) மார்பு.- ஆண் 32" (குறைந்தது) ;

(ஏ) பார்வை வர்ணப் பதிவு மட்டம் .- CP2

(ஐ) தொலைப்பார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்திற் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்து வதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் ப்ளையிங் ஒபீசர்/ப்ளைட் லெப்டினன்ட்/ஸ்குவாட்ரன் லீடர் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப் படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத் துக்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக் கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வு பெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஆ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள வாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக் கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

| | |
|---|---|
| பைலட் ஒபீசர் | - ரூபா 2,42,700 |
| ப்ளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 x 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | - ரூபா 3,21,660-28 x 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | - ரூபா 3,52,620-24 x 7,740 = ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | - ரூபா 3,62,100-20 x 9480 = ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரன்- | - ரூபா 4,41,060-18 x 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் (வருடமொன் றுக்கு) :-

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - ரூபா 3,13,920-2 x 7,740 = ரூபா 3,29,400 |
| தரம் II | - ரூபா 3,37,140-8 x 7,800 = ரூபா 3,99,540 |
| தரம் I | - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140 |
| விசேட பிரிவு | - ரூபா 5,08,680-12 x 15,720 = ரூபா 6,97,320 |

(இ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் :

தரம் II - ரூபா 3,06,180-4 x 7,740-10 x 7,800- 3 12,600 = ரூபா 4,52,490
தரம் I - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140
விசேட பிரிவு - ரூபா 5,08,680-12 x 15,720 = ரூபா 6,97,320

(ஈ) வைத்திய, பல் வைத்திய அதிகாரிகளுக்கான வேறு கொடுப்பனவுகள் (மாதமொன்றுக்கு) :

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு :
ஆரம்பப் பிரிவு - ரூபா 1,700
தரம் II - ரூபா 1,700
தரம் I - ரூபா 3,400
விசேட பிரிவு - ரூபா 3,400

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு மாதமொன்றுக்கு :
ஆரம்பப் பிரிவு - ரூபா 2,125
தரம் II - ரூபா 1,700
தரம் I - ரூபா 400

(3) மேலதிக வேலைப்படி - ரூபா 25,500

(4) மேலதிக வேலை கொடுப்பனவு மணித்தியாலத்துக்கு :
ஆரம்பப் பிரிவு - ரூபா 335
தரம் II - ரூபா 383
தரம் I - ரூபா 528
விசேட பிரிவு - ரூபா 628

(5) தேவையைப் பொருத்து பந்தி 15 (ஈ) உள்ள சேவை கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) சேவைக் கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,400 ;

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு 1,000) ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255) ;

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 14,939.10 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;

(11) அடிப்படைப் படியில் 20% ;

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது வசு வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(18) சேவைக் கொடுப்பனவு ரூபா 300, ரூபா 400, ரூபா 500. (வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக்காலத்தைப் பொறுத்து).

(19) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500 (வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(20) 1/20 கொடுப்பனவு, மாதமொன்றுக்கு - அடிப்படைச் சம்பளம் x 1/20 x 3 நாட்கள் மட்டும். (வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(21) மேலதிக கொடுப்பனவு 120 மணித்தியாலம்- ஒரு மாதத்திற்கு (வைத்திய, பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(22) வரவு செலவுத் திட்டத்தின்படி ரூபா 3,000 மாதாந்தம்.

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவுகள் என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2015, பெப்புருவரி 25 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கலை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில்

அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர்களுக்கான விண்ணப்பம் ..................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பத்தாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

* **குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

கே. ஏ. குணதிலக,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில்** .................
**பிரிவில் அரசாணை அலுவலர் பதவி**

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.)

2. முழுப்பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

8. அஞ்சல் முகவரி :----.

9. E-Mail (மின்-அஞ்சல்) முகவரி :----.

10. பிறந்த திகதி :----.

11. உயரம் :----.

12. மாவட்டம் :----.

13. தேர்தற் தொகுதி :----.

14. கிராம அலுவலர் பிரிவு :----.

15. தொலைபேசி இலக்கம் :----.

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

17. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தி யடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.) | | |
| | க.பொ.த. (உ.த.) | | |
| | தொழில் | | |
| | தகைமைகள் | | |
| | வேறு | | |

18. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

19. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

21. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

22. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

23. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

24. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பெறுபேற்றினையும் தருக :----.

25. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவ ராயின் அல்லது பிணையில் விடப்பட்டவராயின் விபரங்கள் தருக :----.

26. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள்/அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

27. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

28. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத் துகை.**- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத் துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழி கிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்த மானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்த மான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

2-130

---

**இலங்கை நிரந்தர வான்படை**

பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழ்வரும் பிரிவுகளில் பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன.

(அ) பொதுக்கடமை விமான ஓட்டுனர் பிரிவு (ஆண்)
(ஆ) தொழில்நுட்ப பொறியியல் (ஆண்)
(இ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு (ஆண்)
(ஈ) உபகரணப் பிரிவு (ஆண்)
(உ) நிருவாக பிரிவு (ஆண்)
(ஊ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (ஆண்/பெண்)
(எ) வான் வழி நடத்துனர் பிரிவு (ஆண்)

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

(அ) ***BSc. (Aviation Studies) பட்டப் பயிற்சிக்கு உட்செல்வ தற்கான தகைமை (ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவலை பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட)***

***பொதுக்கடமை விமான ஓட்டுனர்/வான் வழி நடத்துனர் பிரிவுகள் :***

குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல் பிரிவுகளில் (தேவையைப் பொருத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*தொழில்நுட்ப பொறியியல் பிரிவு/இலத்திரனியல் பொறியியல் பிரிவுகள் :*

குறைந்த பட்சம் க. பொ. த. (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக பிரிவில் (தேவையைப் பொருத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*உபகரணப் பிரிவு/ நிருவாகப் பிரிவு/ நிருவாக ரெஜிமன்ட் பிரிவுகள் :*

குறைந்த பட்சம் க. பொ. த. (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/உயிரியல்/வர்த்தகப் பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் கலைப்பிரிவு மாணவர்கள் குறைந்தபட்சம் க. பொ. த. (உ. த.) மூன்று பாடங்கள் சித்திபெற்றிருப்பின் நிருவாக ரெஜிமன்ட் பிரிவிற்கு விண்ணப்பிக்கலாம்.

3. **வேறு தகைமைகள்**.- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்ப தாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது :- 2015, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம் :- ஆண்- 5 அடி 6 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும் ; பெண்-5 அடி 4 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) உடல் நிறை :- ஆண் $17 <$ உடற்பருமன் சுட்டி (BMI) $< 26$
பெண் $17 <$ உடற்பருமன் சுட்டி (BMI) $< 25$

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ) } 2}$$

(உ) மார்பு :- ஆண் 32" (குறைந்தது)

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

(எ) தொலை பார்வை :- இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(ஏ) குடியியல் நிலை :- விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும் ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற்தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (அ) தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொருத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றை பெறுவர்.

(ஆ) பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப் படுவர்.

(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின்போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

(ஈ) ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

(உ) பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

(ஊ) ஒரு பயிலிளவல் பயிற்சியின்போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகாலவரையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

(எ) ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின்போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

(ஏ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணபப்பபடிவத்தின் 27 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப் பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) பந்தி 02 இலும் 03 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வுநாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தரப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அலுவலர் தரப்பரீட்சையில் சித்தி பெறும் தேர்வுநாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப் படுவதுடன். (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படை யினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சபைக்கு உட்படுத்தப்படுவர்.) தேவைப்படின் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வுநாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

(ஒ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(ஓ) திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

(ஔ) எல்லா அலுவலருக்கும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

(அஅ) எல்லா அலுவலருக்கும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்** :- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

***8. சம்பளமும் கொடுப்பனவுகளும்.- (அ) இலங்கை வான் படையில் பயிலுனர்களுக்கும் ஆணைபெற்ற அலுவலர்களுக்கு மான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) -***

பயிலிளவல் : ரூபா 1,87,620
பைலட் ஆபீசர் : ரூபா 2,42,700
பிளையிங் ஆபீசர் : ரூபா 2,75,220 – 34 x 7,740 - ரூபா 5,38,380
ப்ளையிட் லெப்டினன்ட் : ரூபா 3,21,660 – 28 x 7,740 - ரூபா 5,38,380
ஸ்குவாட்ரன் லீடர் : ரூபா 3,52,620 – 24 x 7,740 - ரூபா 5,38,380
விங் கமாண்டர் : ரூபா 3,62,100 – 20 x 9,480 - ரூபா 5,51,700
குறூப் கப்ரின் : ரூபா 4,41,060 – 18 x 12,600 - ரூபா 6,67,860

(ஆ) ***ஏனைய கொடுப்பனவுகள்.-***

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800.

(2) உற்சாகமூட்டும் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி : மாதமொன்றுக்கு ரூபா 600.

(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000.

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.)

(6) இடைக்காலக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255).

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 14,939.10 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) விசேட கொடுப்பனவு 20% அடிப்படைச் சம்பளத்தில்

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும் துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்)

(13) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின் மீளளிப்பு.

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(16) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) பொதுக்கடமை விமான ஓட்டுனர் கிளையில் உள்ளவர்களுக்கு பறத்தல் சம்பளம் வழங்கப்படும்.

(18) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இல் இருந்து குறுப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(19) வரவுசெலவுத் திட்டத்தின்படி ரூபா 3,000 மாதாந்தம்.

9. **ஓய்வூதியங்கள் / பணிக்கொடைகள்**.- காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆண்டின் வான்படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலன வாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துப வராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடியனவாகும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப் பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப் பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங் களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2015, பெப்புருவரி 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதம ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான விண்ணப்பம்- ............................ பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப் பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமை யதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் 'விடுவிக்கப்படுவர்' என்ற கூற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தேர்வுநாடி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும் போது பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத் தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(2) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்).

(4) இரு குணநலச் சான்றிதழ்கள். இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பக் காரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(5) விளையாட்டுத்துறைகள், பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

11. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

12. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தேர்வுநாடிகளிலிருந்து பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் தேர்வுநாடி களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து பொருத்த மாகக்கூடியவரான தேர்வுநாடிகள் வான்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வுநாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டா.

கே. ஏ. குணதிலக,
எயர் மார்ஷல்,
வான் படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. எண் 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படை**

........................... பிரிவில் ஆண்/பெண் பயிலிளவல் அலுவலர் பதவி

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையிலுள்ளபடி) :----.

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தற்போதைய அஞ்சல் முகவரி :----.

6. பிறந்த திகதி :----.

வயது (2015, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று) :-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. உயரம் : ---- அடி, ---- அங்குலம்.

8. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் : ----.

9. மாவட்டம் :----.

10. தேர்தற் தொகுதி :----.

11. கிராம அலுவலர் பிரிவு :----.

12. தொலைபேசி இலக்கம் :----.

13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

14. பால் :----.

15. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

16. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

17. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

18. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

19. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

20. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

21. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

22. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதன் பொருட்டு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

23. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக :----.

24. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள்/அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

25. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

**26. விண்ணப்பக்காரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத் துகை-**

மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறைகளையும் அவர்கட்குப் பொருத்த மான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**27. விண்ணப்பக்காரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவல ரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :**

(அ) இலங்கை வான்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 26 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் ............................ என்பவருக்கு நான் பெற்றோர்/ பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் :-

(1) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைக் குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் உடன் படுகிறேன்.

----,
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

2-131

---

**இலங்கை நிரந்தர வான்படை**

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன :

1. (அ) தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :

(1) ***வானூர்தி பொறியியல் (ஆண்/பெண்) :***
*(அ) வான் அமைப்பு எந்திரவியலாளர்*
*(ஆ) வானூர்தி இயந்திரவியலாளர்*
*(இ) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர்*
*(ஈ) கருவிகள் பாதுகாப்பு உதவியாளர்*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும், அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

(2) ***பொது பொறியியல் : (ஆண்)***

*(அ) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர்*
*(ஆ) ஆயுத இயந்திரவியலாளர்*
*(இ) பொது இயந்திரவியலாளர்*
*(ஈ) வானூர்தி காய்ச்சிப் பொருத்தும் உதவியாளர்*
*(உ) மேற்பரப்பு தொழில்நுட்ப உதவியாளர்*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.*

*(ஊ) மோட்டார் வாகன இயக்குநர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். இலகு வாகன அனுமதிப்பத்திரம் கட்டாயம் இருத்தல் வேண்டும். மேலும் கனரக வாகன அனுமதிப்பத்திரம் இருப்பின் ஆட்சேர்ப்பின்போது முன்னுரிமை வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் சித்தி யடைந்த அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறைப் பயிற்சியில் சித்தியடைதல் வேண்டும்.*

(3) ***வைத்தியத் துறை (ஆண்) :***

*தாதி உதவியாளர்*
*பல் வைத்திய உதவியாளர்*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும், மேலதிக ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/ கணிதம்/ விவசாய விஞ்ஞானம்/ ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சி நெறியைப் பெற விசேட தகைமையாகக் கருதப்படும்.*

(4) ***உபகரணத்துறை :***

*(அ) போசனசாலை மேற்பார்வையாளர் (Ground Steward) (ஆண்/பெண்) :*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் ஆங்கில மொழியில் சித்தியும் அல்லது ஆங்கில மொழி சரளமாகப் பேசும் திறமை இருப்பின் ஆட்சேர்ப்பின்போது முன்னுரிமை வழங்கப்படும்.*

*(ஆ) உணவக உதவியாளர் : (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.*

(5) ***பரிபாலனத்துறை :***

*(அ) பரிபாலன உதவியாளர் (ஆண்/பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகிய வற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கணினி அனுபவம் இருத்தல் பரிபாலனத் துறைக்கு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.*

*(ஆ) கணக்கியல் உதவியாளர் (ஆண்/பெண்) :*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் கணினி அனுபவம் இருத்தல் கணக்கியல் துறைக்கு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.*

(6) ***தொழிற்பாடுகள் துறை :***

*(அ) வான் தொழிற்பாடுகள் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.*

*(ஆ) பூமி தொழிற்பாட்டாளர் (ஆண்/பெண்)*

*(இ) நாய்களைக் கையாள்பவர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.*

*தீயணைப்பாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.*

*(7) உடற் பயிற்சியாளர் - நிரந்தரம் (ஆண்/பெண்) :*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தேசிய மட்டத்தில் மெய்வல்லுநர் விளையாட்டு தொடர்பான தகைமை விசேட கவனத்தில் கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறைப் பயிற்சியில் சித்தியடைதல் வேண்டும்.*

(8) ***பொலிஸ் துறை :***

*(அ) பொலிஸ் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். உயரம் 5 அடி 8 அங்குலமும் அதற்கு மேலும் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.*

## இலங்கை தொண்டர் வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறையில் வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன

*2. (அ)* **தொழில்துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

*(1) பொது பொறியியல் (ஆண்)*

*மோட்டார் வாகன இயக்குநர் (ஆண்) :*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தோற்றியிருத்தல் (இலகு வாகன அனுமதிப்பத்திரம் கட்டாயம் இருத்தல் வேண்டும். மேலும் கனரக வாகன அனுமதிப்பத்திரம் இருப்பின் ஆட்சேர்ப்பின்போது முதலுரிமை வழங்கப்படும்.) நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறைப் பயிற்சியில் சித்தியடைதல் வேண்டும்.*

*3.* ***ஏனைய தகைமைகள்.***- இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

*தேசிய இனம்.*- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

*குடியியல் நிலை (நிரந்தர - ஆண்/பெண்).*- விவாகமாகாதவர்கள்

*(தொண்டர் - ஆண்).*- விவாகமானவர்கள்/விவாகமாகாதவர்கள்

*வயது (நிரந்தர-ஆண்).- 2015.04.30* ஆந் திகதியன்று *18-23* வரை இருத்தல் வேண்டும் ;

*(தொண்டர்-ஆண்).- 2015.04.30* ஆந் திகதியன்று *18-30* வரை இருத்தல் வேண்டும் ;

*(நிரந்தர-பெண்).- 2015.04.30* ஆந் திகதியன்று *18-22* வரை இருத்தல் வேண்டும் ;

*உயரம் (நிரந்தர-ஆண்).- 5* அடி *5* அங்குலமும் அதற்கு மேலும் ;

*(தொண்டர்-ஆண்).- 5* அடி *4* அங்குலமும் அதற்கு மேலும் ;

*(நிரந்தர-பெண்).- 5* அடி *3* அங்குலமும் அதற்கு மேலும்.

*உடல் நிறை.-* (ஆண்) $17 <$ உடற்பருமன் சுட்டி (BMI) $< 26$
(பெண்) $17 <$ உடற்பருமன் சுட்டி (BMI) $< 25$

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் }^{2}\text{(m)}}$$

*பார்வை வர்ணப்பதிவு மட்டம்.*- CP2

*தொலைபார்வை.*- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

*(அ) குடியியல் நிலை.- நிரந்தர வான்படை வீரர்/ நிரந்தர வான்படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற்பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய வான்படை வீரர்களுக்கு அனுமதி வழங்கப் படும்).*

(ஆ) தொண்டர் வான்படை வீரர்கள் விவாகமானவர்கள்/ விவாகமாகாதவர்கள் (விவாகமாகாதவர்கள் வான்படையில் இணைந்து அடிப்படைப் பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

4. பந்தி 1 (அ), 2 (அ) 3 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த வுடன் உயரம், நிறை கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம், நிறை கண் பார்வை முதலியவை இல்லா திருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படைத் தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாகக் கவனத்திற்கொள்ளப்படும்.

**6. சேவை நிபந்தனைகள் :**

(அ) வான்படை வீரர்/வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளை களுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய நிரந்தர வான்படை வீரர்கள்/நிரந்தர வான்படை வீராங்கனைகளுக்கு அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்படுவதுடன் தொண்டர் வான்படை வீரர்கள் அடிப்படைப் பயிற்சியும் வழங்கிய பின் அவர்கள் (நிரந்தர/தொண்டர்களாக) இலங்கையின் எந்தப் பிரதேசத் திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

**7. தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்.-** (அ) நிரந்தர வான்படை வீரர்/நிரந்தர வீராங்கனைகள் தொடர்பாக.- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்டுகப்படுவார்கள். மேலும், 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது, மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

(ஆ) தொண்டர் வான்படை வீரர் தொடர்பாக.- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 5 ஆண்டுகள் கழிந்த பின் வான்படை தளபதியால் அனுமதிக்கும் இடத்தில் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்த்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

**8. அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

**9. சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| விமான வீரன் | : | ரூபா 1,73,100-6 X 1,740-19 X 2,040 = ரூபா 2,23,300 |
| முன்னணி விமான வீரன் | : | ரூபா 1,78,320-4 X 1,740-19 X 2,400 = ரூபா 2,23,300 |
| கோப்ரல் | : | ரூபா 1,83,540-10 X 2,040 - 9 X 2,880 = ரூபா 2,29,860 |
| சார்ஜன்ட் | : | ரூபா 1,87,620-3 X 2,040 - 9 X 2,880 - 3 X 3,840 = ரூபா 2,31,180 |
| பிளைட் சார்ஜன்ட் | : | ரூபா 1,91,700-1 X 2,040-9 X 2,880-3 X 3,840 = ரூபா 2,31,180 |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 1,99,500-7 X 2,880-14 X 3,840 = ரூபா 2,73,420 |
| பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 2,23,500-13 X 3,840 = ரூபா 2,73,420 |

மேற்குறிப்பிட்ட சம்பளத் திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க வான்படை வீரர்களுக்கு சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

(ஆ) வேறு கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 7,800 ரூபா ;

(2) கடினப்படி மாதமொன்றுக்கு 600 ரூபா ;

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு 3,900 ரூபா வழங்கப்படும் ;

(4) விசேட கடினப் படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு 2,400 ரூபா வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம்) ;

(5) விசேட கொடுப்பனவு.- அடிப்படை சம்பளத்தில் 15% மற்றும் 750 ரூபா ;

(6) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு 250 ரூபா இலிருந்து 850 ரூபா வரை) ;

(7) உணவுக் கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர்/ வீராங்கனை மாதமொன்றுக்கு 13,197 ரூபா (உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவச உணவு வசதி) ;

(8) சீருடைக் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு 170 ரூபா வழங்கப்படும் ;

(9) மேலதிகக் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு 1,000 ரூபா வழங்கப்படும் ;

(10) *தங்குமிட வசதி.-* உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;

(11) *பிரயாணம்.-* ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர் / வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(12) *கலவரகாலப்படி.-* நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும். (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(13) *தகைமைச் சம்பளம்.-* விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(14) *நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.-* மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு 30 ரூபா இலிருந்து 511 ரூபா வரை வழங்கப்படும் ;

(15) *மீள அமர்த்தலுக்கான சம்பளம்.-* மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் 300 ரூபாவுக்கு உரித்துடையவராவர் ;

(16) *மருத்துவம்.-* வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும் ;

(17) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும் ;

(18) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு 1,200 ரூபா இருந்து 3,300 ரூபா வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர் ;

(19) *விரிவுரையாளர் கொடுப்பனவு.-* மாதமொன்றுக்கு ரூபா 425 இலிருந்து 510 ரூபா வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர் ;

(20) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்ட திட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும் ;

(21) ஓய்வூதியங்கள் / பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவு தொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

10. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்.-** (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு துறையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத்தின்/சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமை அதிபதியவர்கள் ஊடாகவே அனுப்பப்படுதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் 'விடுவிக்கப்படுவர்' என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த ஒருவரிடம் இருந்தும் அல்லது விண்ணப்பக்காரரின் தொழில்தருநரிடமிருந்தும் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் (தொழில் புரிவாராயின்) ;

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலிய வற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா.

11. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு தங்களின் செலவில் முகம் கொடுக்க வேண்டும்.

12. நேர்முகப் பரீட்சை, "கட்டளை- ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல" இல் நிரந்தர ஆண் விண்ணப்பதாரிகளுக்கு 2015, பெப்புருவரி மாதம் 12, 13, 16, 18, 19 மற்றும் 20 ஆந் திகதிகளிலும் தொண்டர் ஆண் விண்ணப்பதாரிகளுக்கு 2015, பெப்புருவரி மாதம் 19 மற்றும் 20 ஆந் திகதிகளிலும் நேர்முகப் பரீட்சை நிரந்தர பெண் விண்ணப்பதாரிகளுக்கு 2015, பெப்புருவரி மாதம் 23 மற்றும் 24 ஆந் திகதிகளிலும் காலை மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 13.00 மணிவரை நடைபெறும்.

13. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பதாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

14. தாங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமான வர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பதாரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படை யில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

15. விண்ணப்பதாரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையிழக்கச் செய்யும்.

16. விண்ணப்பத்தில் காணப்படும் ஏதேனும் பிழையான தகவல் அல்லது கூற்று தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

17. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

(கே. ஏ. குணதிலக),
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீரர்களுக்கான ............................................ பதவி

1. முழுப் பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டைப்படி)
2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.
4. அஞ்சல் முகவரி :----.
5. நிரந்தர முகவரி :----.
6. நிரந்தர முகவரியின் பொலிசு நிலையம் :----.
7. மாவட்டம் :----.
8. தேர்தற் தொகுதி :----.
9. கிராம அலுவலர் பிரிவு :----.
10. தொலைபேசி இலக்கம் :----.
11. பிறந்த திகதி :----.
12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.
13. பால் :----.
14. உயரம் : அடி ---- அங்குலம் ----.
15. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டெண் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

16. க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| ஆண்டு | சுட்டெண் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

17. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----. (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)
18. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் :----.
19. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.
20. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.
21. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.
22. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

23. **விண்ணப்பதாரர் கையொப்பமிட வேண்டிய வெளிப் படுத்துகை :**

மேலே கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான் படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

2-132

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின்
உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015

இவ்வமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிகளில் நிலவுகின்ற 2 வெற்றிடங்களுக்காக தகுதியுடையவர்களைத் தெரிவுசெய்துகொள்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார்செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் "நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதி 2015.03.06 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட கடிதமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படுகின்ற நட்டங்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி தீர்மானிக்கப்படுகின்றது.

2. **சேவை நிபந்தனைகள் :**

(அ) இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/தபுதாரர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ஆ) பதவியில் நியமனம் பெறுகின்ற அலுவலர்கள் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் அம்மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(இ) பொது நிருவாகச் சுற்றறிக்கை 1/2014 இன்படி மற்றைய மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தை 5 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த அலுவலர்கள் 3 வருட காலத்துக்குள் அரச கரும மொழியொன்றின் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் மற்றைய அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியை 5 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். 1 ஆம் தொகுதிக்குரிய இரண்டாம் அரச கரும மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ஈ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படுகிறது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 6-2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி எஸ்எல்-1-2006, ரூபா 22,935-10X645-8X790-17X1,050-ரூ. 53,555 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டமொன்று உரித்தாகிறது

4. **தகைமைகள் :**

(i) **கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற்தகைமைகள்**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக இருத்தல்.

(ii) **அனுபவம்**.- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் 3 வருட காலத்துக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

6. **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

7. **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;
(ii) நன்றாக ஆங்கில மொழியைக் கற்றிருக்க வேண்டும் ;
(iii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
(iv) விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவைப்படுகின்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படுகின்ற இறுதித் திகதிக்கு அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

8. **அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சை.**- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

9. **நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :**

| விடயம் | அதிகூடிய புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 1. **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | |
| (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படுகின்ற சட்டம் பற்றிய பட்டத்தில்- | | |
| முதலாம் வகுப்புச் சித்திக்காக | 20 | |
| இரண்டாம் வகுப்புச் சித்திக்காக | 15 | 20 |
| இரண்டாம் வகுப்பின்கீழ் சித்திக்காக | 10 | |
| (ii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சை முதலாம் வகுப்புச் சித்திக்காக | 15 | |
| (iii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சை இரண்டாம் வகுப்புச் சித்திக்காக (புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படுவது பட்டம் அல்லது சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் பரீட்சை ஆகிய இரண்டில் பெறப்பட்ட உயரிய தகைமைக்கு மாத்திரமே.) | 10 | |
| 2. **மேலதிக தொழிற்றகைமைகள் :** | | |
| (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியினால் வழங்கப்படுகின்ற சட்டத்துறையின் பட்டப்பின் படிப்பு (LLM) | 15 | |
| (ii) கற்கைநெறியின் காலப்பகுதி ஓராண்டுக்குக் குறையாத சட்டத்துறையின் பட்டப்பின் சட்ட டிப்ளோமா | 08 | 15 |
| (iii) கற்கைநெறியின் காலப்பகுதி 6 மாதங்களுக்குக் குறையாத பட்டப்பின் சட்ட டிப்ளோமா | 05 | |
| 3. **அனுபவம் :** | | |
| (i) அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் சட்டத்தரணி ஒருவராக பெற்றிருக்கும் அனுபவம் (விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைகளாகிய 3 வருட சேவை அனுபவத்திற்கு மேலதிகமாக சட்டத்தரணியாகப் பெற்றுள்ள அனுபவம் கவனத்திற் கொள்ளப்படுகிறது.) | ஆண்டொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் | 30 |

| | விடயம் | அதிகூடிய புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| | ஓராண்டுக்கு 05 புள்ளிகள் வீதம் உச்சப் புள்ளிகள் 30 ஆகும். | | |
| | (நீதிபதி ஒருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரிட மிருந்து அல்லது 20 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள சட்டத்தரணி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழொன்றின் மூலம் அனுபவத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.) | | |
| 4. | **கணினித் தேர்ச்சி :** | | |
| | (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பப் பாடம் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் | 15 | |
| | (ii) 6 மாதங்களுக்குக் குறையாத கற்கைநெறிக் காலத்தை அரசாங்கத் தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா | 10 | 15 |
| | (iii) 3 மாதங்களுக்குக் குறையாத கற்கைநெறிக் காலத்தைக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் பற்றிய தராதரப்பத்திர கற்கைநெறி | 05 | |
| 5. | **ஆங்கில மொழித் தேர்ச்சி :** | | |
| | (i) பட்டம், பட்டப் பின்படிப்பு, சட்டத்துறைக் கற்கைநெறி சட்டப்பின் கற்கைநெறி ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல் (சம்பந்தப்பட்ட சகல பரீட்சை வினாத்தாள்களுக்கும் ஆங்கில மொழியில் விடையளித்திருத்தல் வேண்டும்.) | 15 | |
| | (ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரசாங்கத்தால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா (கற்கைநெறியின் காலப்பகுதி 6 மாதங் களுக்குக் குறையாத) | 10 | 15 |
| | (iii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரசாங்கத்தால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஆங்கில மொழி பற்றிய தராதரப்பத்திர கற்கைநெறி | 05 | |
| | (கற்கைநெறியின் காலப்பகுதி 3 மாதங்களுக்குக் குறையாத) | | |
| 6. | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படுகின்ற திறமை | 05 | 05 |

10. (i) விண்ணப்பம் 22x29 செ. மீ. அளவிலான A4 தாளில் தயார்செய்ய வேண்டுமென்பதுடன் 1 தொடக்கம் 14 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 15 தொடக்கம் முடிவடையும் வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குகின்றவாறு தயார் செய்ய வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக எழுதப்பட வேண்டும். சகல விதத்திலும் சரியாகப் பூர்த்தியாகாத அடிப்படைத் தகைமைகள் இல்லாத உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும். மேலும் பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக உள்ளதா என விண்ணப்பதாரர் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் மேலும் அறிவித்துக்கொள்கிறேன். விண்ணப்பங்களை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயார் செய்யவும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

**கவனிக்குக :**

(அ) விண்ணப்பத்துடன் எந்தவோர் ஆவணமோ அல்லது அதன் பிரதியொன்றோ இணைத்தலாகாது.

(ஆ) வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ii) அரசாங்க சேவையின்/மாகாண அரசாங்க சேவையின்/அரசாங்க கூட்டுத்தாபனங்களில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத்/நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்ப வேண்டும்.

11. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள் காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்திற்கான சேவைப்பிரமாணம் மற்றும் அதற்குச் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்காக ஏற்புடையதாகிறது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்,

கமலினீ த சில்வா,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2015, சனவரி 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

***நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் (சட்டம்) பதவி***

இல. .............................................
(அலுவலக உபயோகத்துக்காக)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

4. தொலைபேசி இல. :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | |

6. ஆணா/பெண்ணா என்பது :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

9. தேசிய இனம் :----.

10. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :----.

11. சட்டப் பட்டம் பற்றிய விபரம் :----.

பல்கலைக்கழகம் :----.
பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
மொழிமூலம் :----.

12. சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

13. சட்டத்தரணியாகத் தொழில் அனுபவம் :----. வருடங்கள் :----.

14. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 9 ஆம் பந்தியின்படி தகைமைகள் :

(i) :----.
(ii) :----.
(iii) :----.
(iv) :----.
(v) :----.
(vi) :----.
(vii) :----.
(viii) :----.

15. மொழித் தேர்ச்சி (சம்பந்தப்பட்ட கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக.)

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | மிகக் குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

.................................................... ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை எனவும், உண்மையானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டோ, வினைத் திறமையின்மையின் காரணமாக சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டோ இல்லை எனவும், பதவியை கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துறேன். இதில் அடங்கியுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ...................................................................................... தற்போது இவ்வமைச்சில்/திணைக்களத்தில் ...................................................................... ஆக நிரந்தர/தற்காலிக/அமய அலுவலர் ஒருவராக சேவை செய்கின்றார் என்றும் இப்பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

2-170

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, பங்குனி மாதம் 09 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, தை 19.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | வெலிபிட்டிய | மதுராகொட பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |

2-160

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, பங்குனி மாதம் 09 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, சனவரி 20.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | அக்குறணை | வராகிஸ்ஹின்ன பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

2-161

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### சுகாதார அமைச்சின் திணைக்கள தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு (MN-03 2006(A)) ஆட்சேர்ப்பு செய்வதற்கான பகிரங்கப் போட்டிப் பரீட்சை - 2015

சுகாதார அமைச்சின்கீழ் செயற்படும் வைத்தியசாலைகள், நிறுவனங்களில் காணப்படும் தொழில்நுட்ப பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு (பகிரங்க போட்டிப் பரீட்சையின்கீழ்) பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவிகள் தொடர்பான விபரம் :**

| தொடர் இல. | பதவி |
|---|---|
| 1 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III |
| 2 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) தரம் III |
| 3 | தொழில்நுட்ப புகைப்பிடிப்பாளர் தரம் III |
| 4 | இயந்திர பரிபாலகர் தரம் III |
| 5 | மின் உயர்த்தி தொழில், தொழில்நுட்பவியலாளர் தரம் III |

(**குறிப்பு**.- நீங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பினால் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்களினை அனுப்பிவைத்தல் வேண்டும். ஒரு கடித உறையில் ஒரு பதவிக்குரிய விண்ணப்பத்தினை மாத்திரம் அனுப்பி வைக்கவும்.)

2. சுகாதார அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் தகைமை பெறும் பரீட்சார்த்திகள் சுகாதார அமைச்சின்கீழ் இணைக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைவாக பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

**3. கல்வி மற்றும் தொழில்நுட்பத் தகைமைகள் :**

| தொடர் இல. | பதவி | கல்வித் தகைமை | தொழில்சார் தகைமை |
|---|---|---|---|
| 1 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III | (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>அத்துடன்<br>(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின்கீழ் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) | (i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப் பட்டுள்ள தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள பொறியியல் (சிவில்) டிப்ளோமா<br>அல்லது<br>(iii) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் பட்டுள்ள தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(iv) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பொறியியல் (சிவில்) உயர் தேசிய டிப்ளோமா<br>அல்லது<br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(vi) சம்பந்தப்பட்ட தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 5/ 6 இனைப் பூர்த்திசெய் திருத்தல் வேண்டும். |
| 2 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) தரம் III | (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி கணிதம் மற்றும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>அத்துடன்<br>(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (பழைய பாடத்திட்டத்தின்கீழ் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) | (i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள பொறியியல் டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>(iii) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>(vi) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பொறியியல் (மின்) உயர் தேசிய டிப்ளோமா<br>அல்லது<br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>(vi) சம்பந்தப்பட்ட தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 5/ 6 இனைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவி | கல்வித் தகைமை | தொழில்சார் தகைமை |
|---|---|---|---|
| 3 | தொழில்நுட்ப புகைப்படப் பிடிப்பாளர் தரம் III | (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>அத்துடன்<br>(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் சகல பாடத்திலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) | (i) அரச அல்லது அரசு இணைப்பு நிறுவனத்தில் புகைப்படப் பிடிப்பு தொடர்பான 2 வருடங்களுக்கான டிப்ளோமா பாடநெறி பூரணப் படுத்தப்பட்டிருத்தல். |
| 4 | இயந்திர பரிபாலகர் தரம் III | (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>அத்துடன்<br>(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் சகல பாடத்திலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) | (i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (மின்/இயந்திரம்)<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள பொறியியல் (மின்/இயந்திரம்) டிப்ளோமா<br>அல்லது<br>(iii) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் பட்டுள்ள தொழில்நுட்ப டிப்ளோமா (மின்/ இயந்திரம்)<br>அல்லது<br>(iv) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பொறியியல் (மின்/இயந்திரம்) உயர் தேசிய டிப்ளோமா<br>அல்லது<br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்/இயந்திரம்) |
| 5 | மின் உயர்த்தி தொழில் நுட்பவியலாளர் தரம் III | (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>அத்துடன் | (i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள பொறியியல் டிப்ளோமா (மின்) |

| தொடர் இல. | பதவி | கல்வித் தகைமை | தொழில்சார் தகைமை |
|---|---|---|---|
| | | (ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் சகல பாடத்திலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) | அல்லது<br>(iii) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>(iv) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்) |

**4. உடற்தகுதி**.- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் நாட்டின் எந்தப் பகுதியிலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

**5. ஏனைய தகைமைகள் :**

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(2) நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும் ;
(3) விண்ணப்பத்திற்கான அறிவித்தலில்/வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியில் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக வேண்டப்பட்ட மேற்படி சகல விடயங்களிலும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**6. வயது**.- 18 வயதிற்கு கீழ்ப்படாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**7. ஆட்சேர்ப்புக்கான எழுத்துப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சை :

| வினாத்தாள் | பாடத்திட்டம் | காலம் | மொத்த புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|---|
| தொழில்நுட்ப அறிவு | க. பொ. த. உயர் தரத்திற்கு சமமான அறிவு வேண்டப்படும். அதன்படி அனைத்து 03 பதவிகளுக்கும் பொதுவான ஒரு வினாத்தாள் தயார் செய்யப்படும். | 1 1/2 மணித்தியாலம் | 100% | 40% |
| நுண்ணறிவு மற்றும் பொது அறிவு | இலங்கையிலும், உலகிலும் இடம் பெறும் கலாசார, சமூக, பொருளாதார, அரசியல், தொழில்நுட்பம், விஞ்ஞானம், விளையாட்டு மற்றும் சுற்றாடல் போன்ற துறைகளில் கால அடிப்படையிலான மிகவும் முக்கியம் வாய்ந்த நிகழ்வுகள் பற்றியதாக பொது அறிவைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக பொதுவான ஒரு வினாத்தாள் தயார்செய்யப்படும். | 2 மணித்தியாலம் | 100% | 40% |

**8. வேதன அளவுத்திட்டம்**.-ரூபா 15,005-4x180-6x240-11x320-20x360-ரூபா 27,885
(எம்என்-3-2006(ஏ) (பொ. நி. சு. இல. : 6/2006 iv இன்படி)

9. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

* இணைத்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு விருப்பமுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
* நியமிக்கப்படும் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

10. இந்த அறிவித்தலின் நியதிகளுக்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. விண்ணப்பங்கள் பெறப்பட்டது பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. தகுதியுடைய பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். பரீட்சை நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

13. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இதிலுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகைகளில் (எம்என்-03) ..................................................... பதவிக்கு (விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015" எனக் குறிப்பிட்டு 2015.02.23 ஆந் திகதிக்கு முன் "பணிப்பாளர், (நிர்வாகம்) - 07, "சுவசிறிபாய", சுகாதார அமைச்சு, இல. 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(ஆ) முடிவுத் திகதி 2015, பெப்புருவரி 23 ஆந் திகதியாகும்.

(இ) பரீட்சைக் கட்டணம் 300 ரூபா, "இலங்கை வங்கி, தப்ரபேன் கிளை"யில் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் கணக்கு இல. 7041318 வரவு செய்து எந்த இலங்கை வங்கிக் கிளையிலும் பணத்தைச் செலுத்திப் பெற்ற ரசீதுப்பத்திரத்தை விண்ணபப்படிவத்தில் 7 ஆம் கூட்டில் கழராமல் ஒட்டுதல் வேண்டும். (மணியோடர் அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**.- விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்/கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்/அரசாங்க கணக்காளர் சேவை உத்தியோகத்தர்/அரசாங்கப் பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது அரசாங்க நிரந்தரப் பதவி வகிக்கும் வருடாந்த சம்பளமாக ரூ. 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட வேதனத்தைப் பெறும் நிந்தர ஓய்வூதியமுடைய பதவி வகிக்கும் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**குறிப்பு** :

* விண்ணப்பதாரி விண்ணப்பத்தின் ஒவ்வொரு பகுதியையும் நிரப்புவதற்கும் சரியான விபரங்களை வழங்குவதற்கும் கடமைப்பட்டுள்ளவராவர்.

* தொழில் மற்றும் தொழில் தகுதிக்குரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

* மேலே குறிப்பிடப்பட்டவாறு இணைத்துக்கொள்ளப்படும் சகல அலுவலர்களும் அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்புடையதான அனைத்துச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், சுகாதார சேவைத் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட கொள்கைகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக இணைந்து ஒழுகுதல் வேண்டும்.

* இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் எழுகின்ற இந்த பொது சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்ட இந்த அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்களத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலே சரியானதாகும்.

சுதர்மா கருணாரட்ன,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
இல. 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2014, செத்தெம்பர் 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சின் திணைக்கள தொழில்நுட்பவியல் பதவிகளுக்கு (எம்என்-03 2006(ஏ)) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பகிரங்கப் போட்டிப் பரீட்சை - 2015**

வதிவிட மாவட்டம் : ☐

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3 ☐

(உரிய இலக்கத்தினைக் கூண்டினுள் எழுதவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் : திரு./திருமதி/செல்வி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
உ+ம் : SILVA, A. B :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :----.

2. 2.1 முகவரி (தனிப்பட்டது) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 முகவரி (தனிப்பட்டது) (சிங்களம்/தமிழில்) :----.

2.3 முகவரி (அலுவலகம்) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 முகவரி (அலுவலகம்) (சிங்களம்/தமிழில்) :----.

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/கூட்டுத்தாபனம் என்பவற்றில் பணியாற்றும் அலுவலர்கள் தமது அலுவலகத்தின் முகவரியினை குறிப்பிட வேண்டும். முகவரி மாற்றங்கள் ஏற்படும்போது அதுபற்றி உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐

5. பால் (ஆண்/பெண்) :----.

6. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

வருடம் :----, சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ஆ) க. பொ. த. (உயர்தரப்) பரீட்சை :

வருடம் :----, சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(இ) தொழில் மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் :

| சான்றிதழ் | வழங்கப்பட்ட நிறுவனம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

(ஈ) ஏனைய விசேட தகைமைகள் மற்றும் அனுபவங்கள் :----.

7. பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கி :----.
(ii) வங்கிப் பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

வங்கிப் பற்றுச்சீட்டை ஒட்டவும் ; அதன் பிரதியினை வைத்துக்கொள்ளவும்.

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவிற்கெட்டியவரையில் சரியானது என்றும், உண்மையானது என்றும் உறுதிமொழிகின்றேன். ஏதேனும் பிழையான தகவல்களை வழங்கியிருந்தால் அது தொடர்பாக பரீட்சைக்கு முன்னராகவோ அல்லது பின்னராகவோ கண்டுபிடிக்கப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச்செய்யப்படும் என்பதையும் அது தெரிவுசெய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ................................................ என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும் அவர் என் முன்னிலையில் 2015, ........................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

2-72

---

## அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2011 (II) (2015)

அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவான ஒரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 2015, மே மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. இப்பரீட்சைக்கு ஏற்புடைய விண்ணப்பதாரர்களைப் பற்றி 1840/34 ஆம் இலக்க 2013.12.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் பந்தி 8 இனது ஏற்பாடுகள் பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 4 இல் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

*3. முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் (1) அலுவலக முறைமைகள், (2) கணக்கீட்டு முறைமைகள், (3) கணினிப் பரீட்சை என பெயர் குறிப்பிடப்படும் இப்பரீட்சையின் ஒரு பாடத்தை அல்லது சிலவற்றை சித்தியெய்தி விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்குப் பாட அடிப்படையில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து விலக்களிப்புப் பெறல் வேண்டும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.*

*4. அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது, கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது :-*

**அட்டவணை**

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

*மேற்படி ஏதேனும் நிலையங்களுக்காக போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச் செய்யப்படுமென்பதுடன் அதற்கு அண்மித்துள்ள நிலையத்திற்கு பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.*

*5. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குகள் விதிகள் என்பனவற்றுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.*

*(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவ் ஒழுங்குவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவர்.*

*6. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2015, மாச்சு 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி, சேவை நிலையம் மற்றும் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பரீட்சை விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது.*

***குறிப்பு**.- இவ்வறிவித்தலுக்கு சமாந்தரமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் பொருத்தமான மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலமும் வேறு நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் குறித்த நிறுவனத்தின் மூலமும் வெளியிடப்படும்.*

*ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ் இலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும். அவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலதுபக்க மேற்பக்கத்தில் உங்கள் சேவை மற்றும் சேவை நிலையத்தில் குறிப்பிட வேண்டும்.*

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ளவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

8. **விண்ணப்பப்படிவங்கள்**.- விண்ணப்பப்படிவங்களை "ஏ4" அளவிலான ஒரு தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் இலக்கம் 1.0 தொடக்கம் இலக்கம் 3.0 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் மிகுதி இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் அமைதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தட்டச்சின் மூலம் தயாரித்துக்கொள்ளலாம். எனினும் அதைப் பரீட்சார்த்தி தமது சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்ய வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்தல் வேண்டுமென்பதுடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்புதலாகாது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் குறிப்பிட்டுள்ளதான விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது என்பதில் பரீட்சார்த்தி கவனமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்கும் அல்லது இரண்டு பாடங்களுக்குத் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் 400 ரூபா. ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 200 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்குமாறு தீவிலுள்ள ஏதேனுமொரு தபால்/உப தபால் அலுவலகத்திற்குச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடவும். மேலும் அதன் நிழற்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

9. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதன்படி பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று நாட்கள் இருக்கும்போதும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன்படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை குறிப்பிடல் வேண்டும். கொழும்பிற்கு வெளியில் உள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும். மேலும் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும்போது விண்ணப்பதாரி வசம் உள்ள விண்ணப்பப்படிவப் பிரதி அத்துடன் உரிய பணம் செலுத்தவேண்டுமாயின் பற்றுச்சீட்டின் பிரதியொன்றும், விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

10. விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டைகள் வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதப்படமாட்டாது. பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

11. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் தொடர்புடைய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்கு தோற்றிய மொழியிலோ அல்லது அரச கரும மொழியொன்றிலோ அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. பரீட்சைப் பெறுபேறுகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

14. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய ஓர் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் :-

| பாடம் | பாட இலக்கம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் | 01 | 2 மணித்தியாலம் | 100 |
| 2. கணக்கீட்டு முறைமைகள் | 02 | 2 மணித்தியாலம் | 100 |
| 3. கணினிப் பரீட்சை | 03 | 1 1/2 மணித்தியாலம் | 100 |

14.1 அலுவலக முறைமைகள்.- (பாட இலக்கம் 01).- அரச அலுவலகங்களில் கையாளப்படுகின்ற அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவும், அவ் அறிவினை செய்முறையாக பயன்படுத்தும் திறனும், கடமையுடன் தொடர்புடைய ஆவணங்களை நன்கு புரிந்துகொண்டு தெளிவாக சுருங்கிய குறிப்புகளின் மூலம் தமது கருத்துக்களை/ஆய்வுகளை சமர்ப்பிக்கும் ஆற்றலும் விதிக்கப்பட்ட கட்டளையின்கீழ் கடிதமொன்றை வரைவுபடுத்தும் திறனும் சோதிக்கப்படும். இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – சுருக்க விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

14.2 கணக்கீட்டு முறைமைகள்.- (பாட இலக்கம் 02).- அரச அலுவலகங்களில் கையாளப்பட்டு வருகின்ற ஆரம்ப கணக்குகள் மற்றும் கணக்கு கட்டுப்பாட்டுப் புத்தகங்களின் செயற்பாடு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் அளவிட இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – சுருக்க விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

14.3 கணினிப் பரீட்சை.- (பாட இலக்கம் 03).- பரீட்சார்த்தி பின்வரும் ஆற்றல்களைக் கொண்டுள்ளாரா என சோதிப்பது இப்பரீட்சையின் நோக்க மாகும் :-

(i) தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள்
(ii) "வின்டோஸ்" இயக்க முறைமை
(iii) கோப்பு முறை

(iv) சொல்முறை வழிப்படுத்தல் - அடிப்படைத் திறமைகள், திரைக்கு பழக்கப்படல், பாடப்பதிப்பு, பாடங்களை நேர்ப்படுத்தல், எழுத்துரு வகையும் பண்புகளும், பந்தி உள்தள்ளல், வரி வெளிகள் மாற்றுதல், தத்தல் அமைப்பு, பாடத்தைக் கண்டுபிடித்தலும் மாற்றிடுதலும், இலக்கணம், தேசோரஸ் நிரல்கள், பக்க அமைவு செயற்பாடுகள், ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகள் தயாரித்தல், பாடத்தை வரிசைப்படுத்தல், கோப்பு முகாமை, அஞ்சல் இணைப்பு, 'மக்ரோ' தொழிற்பாடு

(v) விரிதாள் - அடிப்படைத் திறமைகள்
வடிவமைத்தல் (Formatting)
பதிப்பித்தல்
நிரல்களும் வீச்சும், செருகுதல், நீக்குதல்
தகவல்களை வரிசைப்படுத்தல்
வரைபடங்களைப் படைத்தல்
அச்சிடல்
(@ பயன்பாடு function)
மக்ரோக்களுடன் பணியாற்றல், கோப்பு முகாமை

(vi) இணையம் - இணையத்தை அறிமுகப்படுத்தல், உலகளாவிய வலையமைப்பு, எவ்வாறு வழி கண்டறிதல் இணையச் செயல்முறை

(vii) மின்னஞ்சல் (e-mail) - அறிமுகம், அடிப்படைத் திறமைகள், அஞ்சல்களைப் பெறுதல், அனுப்புதல், பதிலளித்தல்
- இணைப்புகளுடன் செயலாற்றல், புனைப் பெயர்களை உருவாக்கி பயன்படுத்தல், தகவல்களை இயற்றுதல்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது :-

பகுதி I – பல்விருப்பு/சுருக்கமான பதில்களை எதிர்பார்க்கும் 40 வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். காலம் : 45 நிமிடங்கள் - (40 புள்ளிகள்)

பகுதி II – பகுதி அமைவு ரீதியிலான 5 வினாக்கள் - காலம் : 45 நிமிடங்கள் - (60 புள்ளிகள்)

**குறிப்பு**.- 2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 2013.04.02 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் புதிய அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் இணைப்பு 4 இன்படி தேசிய பயிலுநர் தொழில்நுட்பப் பயிற்சி அதிகாரசபையினால் அளிக்கப்படுகின்ற கணினி நடவடிக்கை உத்தரவுச்சீட்டு சான்றிதழ்களைப் பெற்றுள்ள அலுவலர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி தொடர்பான பட்டமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள், மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேல் மட்டத்திலான கணினி சான்றிதழ்களைப் பெற்றுள்ள அலுவலர்கள் இக்கணினி பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுவர்.

15. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

16. இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள்,
உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள்,
உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2015, சனவரி 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை-2011 (II) (2015)**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE III OF PUBLIC MANAGEMENT ASSISTANTS' SERVICE - 2011 (II) (2015)

உங்களுக்கு உரித்தான சேவை (இதைப் பூரணப்படுத்தமுன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.0 ஐப் பார்க்கவும்.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

(வர்த்தமானி அறிவித்தலின்படி நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரங்களை விருப்பு ஒழுங்கின்படி குறிப்பிடவும்.)
(இதை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.
உதா : GUNAWARDHANA, M. G. B. S. K.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.
2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 பிரவேச அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

3.
3.1 பால் : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐

4. நீங்கள் தற்போது தோற்ற உள்ள பாடம்/பாடங்கள் :-
(வர்த்தமானப் பத்திரிகையின் பந்தி 14.0 ஐப் பார்க்கவும்)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

5. தற்போது வகிக்கும் பதவி -
5.1 பதவி :----.
5.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

6.
6.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? :----.
6.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை அல்லாது இருப்பின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.
6.3 மாவட்ட/பிரதேச செயலகம் :----.
6.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.
6.5 திகதி :----.

முழுப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்காக ரூபா 200 உம் ஆவதுடன் அத்தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், இத்தால் வெளிப்படுத்துகிறேன். இங்கு ஒட்டப்பட்டுள்ள ரூபா ................................ பெறுமதியான பற்றுச்சீட்டு என சான்றுப்படுத்துகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக நான் உடன்படுகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்த திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்தவருமான திரு./திருமதி/செல்வி ........................................ என்பவர் ................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளன என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

1. மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும் ;
2. இவ் அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் *தோற்றியுள்ளார்/தோற்றவில்லை என்றும் ;
3. அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்கு தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;
4. அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

*தேவையற்றவைகளைக் கீறிவிடவும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

*2-226*

---

## இலங்கை அரச நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2012 (2015)

1620/22 ஆம் இலக்க 2009.09.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறான இலங்கை அரச நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 8 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு இலங்கை அரச நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சையொன்று 2015, மே மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இவ்வறிவித்தலின்படி குறித்த வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்காக அரச சேவையின் இணைந்த சேவைக்குரிய அலுவலர் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பு.- இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு சமமாக மாகாண அரச சேவையின் நூலகர் சேவை விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலும் மற்றைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் அவ்வவ் நிறுவனங்களினால் வெளியிடப்படும். ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ்விலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் "10" ஆகும்.

2. (i) இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைக்கென பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டொழுகுதலும் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவார்.

3. இப்பரீட்சைகளுக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் 2015, மாச்சு மாதம் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த.பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க

மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்.**- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் தமது அடையாளத்தைப் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, கீழேயுள்ள ஆவணங்களுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்).

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஏதாவது ஒன்றையேனும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியினது பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம்.

5. **விண்ணப்பங்கள்.**- விண்ணப்பங்கள் ''ஏ4'' அளவினதான ஒரு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 01 முதல் இல. 05 வரை முதலாவது பக்கத்திலும் இல. 06 முதல் இல. 09 வரை இரண்டாவது பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம். ஆனால் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்குமாறு அவரால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை உறுதிப்படுத்துதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாக உள்ளது.

விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை அரச நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2012(2015)'' எனக் குறிப்பிடவும். முதல் முறை இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. எனினும், அடுத்த தடவையாகத் தோற்றும் அலுவலர்கள் ஒரே முறையில் முழுப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் 400 ரூபாவும் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் 200 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்படுதல் வேண்டும். இப்பணத்தொகையை நாட்டில் எந்தவொரு பிரதேச/மாவட்டச் செயலகத்திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 2003-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது என்பதுடன் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்காகவும் மாற்றுதல் தொடர்பாக அனுமதி வழங்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தன்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும்.

6. உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தி சரியாக விண்ணப் பங்களைப் பூர்த்திசெய்து உரிய திகதி அல்லது அதற்கு முன் விண்ணப் பங்களை அனுப்பியுள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பி வைப்பார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விண்ணப்பதாரிகளிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன், அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ்வறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன்படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்ப தாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங் களுடன் தொலை நகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியாயின் தொலைநகல் இலக்கத்துடன் கூடி கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட் டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ள தாகும். மேலும் உறுதிப் படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும்போது விண்ணப்பதாரியின் வசம் உள்ள விண்ணப்பப் படிவ பிரதி அத்துடன் உரிய பணம் செலுத்த வேண்டுமாயின் பற்றுச்சீட்டின் பிரதியொன்றும், விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டைகள் வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள தாக கருதப்பட மாட்டாது.

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை பெற்றுள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பிரயாணச் செலவுகளேதும் வழங்கப்பட மாட்டாது.

8. இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு சேர்வதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சை இன்றி இச்சேவையிற் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடை யளித்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் மொழி மூலமானது அதன் பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

9. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளில் ஆகக்குறைந்தது ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. **பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுகை.**- பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். பரீட்சையிற் சித்தியெய்திய

அலுவலர்களின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

*11.* **பரீட்சைத் திட்டம்.**- இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும் :

(1) பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள்.- பாட இலக்கம் 3 - (புள்ளிகள் 100)

* பகுதி I - பொது நிர்வாகம் (நேரம் : 1 1/2 மணித்தியாலங்கள்) -(50 புள்ளிகள்)

(அ) இலங்கை அரசியலமைப்புச் சட்டம் பற்றிய அடிப்படை அறிவு

(ஆ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் V முதல் VIII வரையும். அத்துடன் XII, XIV, XXIV, XXVII, XXVIII ஆகிய அத்தியாயங்களும் உள்ளடங்கும்.

(இ) 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சுவடிகள் பாதுகாப்பு (திருத்த) சட்டம்

(ஈ) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் III ஆம் பகுதி

(உ) 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் சேவை சபை சட்டம்

(ஊ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டம்

* பகுதி II - நிதி முறைமைகள்

(நேரம் : 1 1/2 மணித்தியாலங்கள்) - 50 புள்ளிகள்

* நிதி ஒழுங்குவிதிகள் - பகுதி I

* நூலகர்களால் நிறைவேற்றப்படும் கணக்கீட்டு வேலையும் அதனுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளும்

(2) நூலக அமைப்பு (நேரம் : 03 மணித்தியாலங்கள்) பாட இலக்கம் 04 (புள்ளிகள் 100)

(அ) நூலகக் கட்டிடங்களும் உபகரணங்களும்

(ஆ) அரசாங்க வெளியீடுகளின் நன்மைகளும் அவைகளைப் பயன்படுத்தும் முறைகளும்

(இ) நூலகத் துறையில் பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள்

(ஈ) நூலக முகாமைத்துவத்தில் உள்ள தந்திரோபாயங்கள்

(உ) நிதி முகாமைத்துவம்

(ஊ) நேர முகாமைத்துவம்

(எ) மனிதவள முகாமைத்துவம்

(ஏ) இலங்கையில் தகவல் தொழில்நுட்பம்

(ஐ) நூலகங்களின் வலையமைப்புக்களும் கணினிமயப் படுத்தப்பட்ட முறைகளும்

**கவனிக்க வேண்டியது.**- இப்பரீட்சையிற் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

*12.* இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

*13.* இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு,
இணைந்த சேவைகள் பிரிவு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2015, சனவரி 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2012(2015)
(Efficiency Bar Examination For Officers in Grade II of the Sri Lanka Librarians' Service - 2012(2015)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

உங்களுக்கு உரித்தான சேவை :
(இதைப் பூரணப்படுத்தமுன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 ஐப் பார்க்கவும்.)

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.3 முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :----.
உதாரணம் : Gunawardhana, M. G. B. S. K.)

2. சேவை நிலையமும் முகவரியும் :

2.1 அமைச்சு/திணைக்கள/நிறுவனத்தின் பெயர் :----.

2.2 அலுவலக முகவரி (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்) :----.

3. பால் : ☐
(பெண் -1, ஆண் -0)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

4. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

5. 5.1 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5.2 பிறந்த திகதி

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6. தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :----.

6.2 நியமனக் கடிதத்தின் இல. :----.

7. 7.1 நீர் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகிறீர்களா ? : ----.

7.2 இல்லாவிட்டால் வேண்டிய எந்தவொரு பிரதேச/மாவட்ட செயலகத்திலும் பரீட்சைக் கட்டணம் செலுத்தி பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொண்ட (இணைத்துள்ள) பற்றுச்சீட்டின்

இலக்கம் ..................................................................
பணத்தொகை ..................................................................
திகதி ..................................................................
வழங்கிய பிரதேச/மாவட்ட செயலகம் ........................
..................................................................

பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை கழராதவாறு ஒட்டிவிடவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.)

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப்பரீட்சைக்குத் தோற்றி விடையளிப்பதற்கு நான் தகுதியுடையவனென்றும், எவ்விதத்தி லானதொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும், நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி களுக்கு இணங்கி ஒழுக இத்தால் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **திணைக்களத் தலைவரின் உறுதியுரை :**

(i) இப்பரீட்சார்த்தி இத்திணைக்களத்தின் சேவையிலுள்ள நூலகர் சேவை தரம் II ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,

(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,

(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்,

(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்,

(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்ற சொற்களை கீறிவிடவும்.)

நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

2-228

---

## இலங்கை அரச நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2012 (2015)

1620/22 ஆம் இலக்க 2009.09.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப் பட்டவாறான இலங்கை அரச நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 08 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு இலங்கை அரச நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையொன்று 2015, மே மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இவ்வறிவித்தலின்படி குறித்த வினைத் திறன்காண் தடைப் பரீட்சைக்காக அரச சேவையின் இணைந்த சேவைக்குரிய அலுவலர் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு.-** இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு சமமாக மாகாண அரச சேவையின் நூலகர் சேவை விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலும் மற்றைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் அவ்வவ் நிறுவனங்களினால் வெளியிடப்படும். ஒவ்வொரு மாகாண அரச சேவை

மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ்விலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் "10" ஆகும்.

2. (i) இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைக்கென பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டொழுகுதலும் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவார்.

3. இப்பரீட்சைகளுக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீடசார்த்திகள் தமது விண்ணப்பத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் 2015, மாச்சு மாதம் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் தமது அடையாளத்தைப் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, கீழேயுள்ள ஆவணங்களுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்).

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஏதாவது ஒன்றையேனும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியினது பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம்.

5. **விண்ணப்பங்கள்**.- விண்ணப்பங்கள் "ஏ4" அளவினதான ஒரு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 01 முதல் இல. 05 வரை முதலாவது பக்கத்திலும் இல. 06 முதல் இல. 09 வரை இரண்டாவது பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம். ஆனால் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்குமாறு அவரால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை உறுதிப்படுத்துதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாக உள்ளது.

விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரச நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2012(2015)" எனக் குறிப்பிடவும்.

முதல் முறை இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. எனினும், அடுத்த தடவையாகத் தோற்றும் அலுவலர்கள் ஒரே முறையில் முழுப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் 400 ரூபாவும் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் 200 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்படுதல் வேண்டும். இப்பணத்தொகையை நாட்டில் எந்தவொரு பிரதேச/மாவட்ட செயலகத்திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 2003-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது என்பதுடன் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்காகவும் மாற்றுதல் தொடர்பாக அனுமதி வழங்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தன்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும்.

6. உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தி சரியாக விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து உரிய திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பி வைப்பார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விண்ணப்பதாரிகளிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன், அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ்வறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன்படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும். மேலும் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும்போது விண்ணப்பதாரியின் வசம் உள்ள விண்ணப்பப்படிவ பிரதி அத்துடன் உரிய பணம் செலுத்த வேண்டுமாயின் பற்றுச்சீட்டின் பிரதியொன்றும், விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டைகள் வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள தாக கருதுப்பட மாட்டாது.

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை பெற்றுள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பிரயாணச் செலவுகளேதும் வழங்கப்பட மாட்டாது.

8. இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு சேர்வதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சை இன்றி இச்சேவையிற் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடை யளித்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் மொழி மூலமானது அதன் பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

9. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளில் ஆகக்குறைந்தது ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. **பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுகை**.- பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். பரீட்சையிற் சித்தியெய்திய அலுவலர்களின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

11. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும் :

(1) பாட இலக்கம் 01 - பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமை கள்.- - 100 புள்ளிகள்

* பகுதி I - பொது நிர்வாகம்
(நேரம் : 1 1/2 மணித்தியாலங்கள்)
- 50 புள்ளிகள்

(அ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் V முதல் VIII வரையும் ; அத்துடன் XII, XIV, XXIV, XXVII, XXVIII அத்தியாயங்களும் உள்ளடங்கும்.

(ஆ) 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை நூலகச் சங்க (கூட்டிணைப்புச் சட்டம்) மற்றும் 2004 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை நூலகச் சங்க (திருத்தச்) சட்டம்

* பகுதி II - நிதி முறைமைகள்
(நேரம் : 1 1/2 மணித்தியாலங்கள்) - 50 புள்ளிகள்

(அ) நிதி ஒழுங்குவிதிகள் - பகுதி I (X ஆம் அத்தியாயம் புறநீங்கலாக) நூலகர்களால் நிறைவேற்றப்படும் கணக்கீட்டு வேலையும் அதனுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளும்.

(2) பாட இலக்கம் 02 - நூலக அமைப்பு - (நேரம் : 03 மணித்தியாலங்கள்) (புள்ளிகள் 100)

(அ) மாகாண நூலக கட்டளைச் சட்டம்
(ஆ) நூலகக் குழுக்கள்
(இ) நூலகப் பொருட்களைப் பாதுகாத்தல்
(ஈ) வாசிப்போர் கல்வியும் பொதுமக்கள் தொடர்பும்
(உ) நூலகங்களின் வகைகளும் சேவைகளும்
(ஊ) நூலக முகாமைத்துவத்தில் ஆராயப்பட வேண்டிய அடிப்படைகளும் தந்திரோபாயங்களும்
(எ) நூலகமொன்றில் அமுல்படுத்த முடியுமான விரிவு படுத்தல் சேவைகள்

**கவனிக்க வேண்டியது**.- விண்ணப்பதாரிகள் இப்பரீட்சையிற் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

13. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2015, சனவரி 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2012(2015)
(Efficiency Bar Examination For Officers in Grade III of the Sri Lanka Librarians' Service - 2012(2015)

☐
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

உங்களுக்கு உரித்தான சேவை : ☐
(இதைப் பூரணப்படுத்தமுன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.0 ஐப் பார்க்கவும்.)

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.3 முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :----.
உதாரணம் : Gunawardhana, M. G. B. S. K.)

2. சேவை நிலையமும் முகவரியும் :

2.1 அமைச்சு/திணைக்கள/நிறுவனத்தின் பெயர் :----.

2.2 அலுவலக முகவரி (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்) :----.

3. பால் :
(பெண் -1, ஆண் -0) ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

4. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |

5. 5.1 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5.2 பிறந்த திகதி

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6. தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :----.

6.2 நியமனக் கடிதத்தின் இல. :----.

7. 7.1 நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகிறீர் களா ? :----.

7.2 இல்லாவிட்டால் வேண்டிய எந்தவொரு பிரதேச/மாவட்ட அலுவலகத்திலும் பரீட்சைக் கட்டணம் செலுத்தி பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொண்ட (இணைத்துள்ள) பற்றுச்சீட்டின்

இலக்கம் ..................................................................
பணத்தொகை ..................................................................
திகதி ..................................................................
வழங்கிய பிரதேச/மாவட்ட செயலகம் ........................
..................................................................

பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டை கழராதவாறு ஒட்டிவிடவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.)

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப்பரீட்சைக்குத் தோற்றி விடையளிப்பதற்கு நான் தகுதியுடையவனென்றும், எவ்விதத்தி லானதொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும், நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி களுக்கு இணங்கி ஒழுக இத்தால் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **திணைக்களத் தலைவரின் உறுதியுரை :**

(i) இப்பரீட்சார்த்தி இத்திணைக்களத்தின் சேவையிலுள்ள நூலகர் சேவை தரம் III ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,
(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,
(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்,
(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்,
(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்ற சொற்களை கீறிவிடவும்.)

நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

2-227

---

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர் களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 2/3/4 (NVQ Level 2/3/4 ) பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2015

நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர் களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 2/3/4 (NVQ level 2/3/4) பாடநெறிக்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களிலிருந்து கீழ்க்காணும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களுள் அவர்களது தகைமைகளையும் திறமைகளையும் கருத்திற்கொண்டு இப்பாடநெறிக்காக உரிய மாகாணங்களில் இருந்து தேவையான

அளவுக்கேற்ப மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். இதற்கு முன்னர் 2014.09.26 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக் கிணங்க ஏற்கனவே விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள விண்ணப்ப தாரர்கள் மீண்டும் விண்ணப்பப்படிவங்களை அனுப்பத் தேவையில்லை என்பதுடன் இந்த வர்த்தமான அறிவித்தலுக்கு ஏற்ப வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து போதுமான அளவு விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறாமையினால் இந்த வர்த்தமான அறிவித்தல் மூலம் உரிய மாகாணங்களில் இருந்து மாத்திரம் மீண்டும் விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பாடநெறியைப் பயில்வதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்ப தாரர்கள்-

(i) நற்பண்புகள் உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(ii) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போதே சேர்த்துக்கொள்ளப் படுவதற்கான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தி யிருத்தல் வேண்டும் ;

(iv) 18 வருடங்களுக்கும் 45 வருடத்திற்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும் ;

(v) இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 11.7" x 8.3" (A4) அளவிலான தாளில் தாமாகவே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். இலக்கம் 14 இன் கீழ் குறிப்பிடப்பட்டபடி ரூபா 20 பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன் மேல் தமது வழமையான கையொப்பத்தையிட்டு பெறுமதிநீக்கம் செய்திருத்தல் வேண்டும். உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2015.02.27 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்க வகையில் நில அளவையாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் "நில அளவையாளர் நாயகம், நில அளவைத் திணைக்களம், த.பெ. இல. 506, கிருல வீதி, கொழும்பு 05" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடநெறியின் பெயர், அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

5. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. இப்பாடநெறி 7 வாரகால பாடநெறியாகும். கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் இரண்டு வார பாடநெறியுடனும், களத்தில் ஐந்து வார நடைமுறைப் பயிற்சி பாடநெறியுடனும் கூடியதாக இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமையும். தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் பயிற்சிக் காலப்பகுதியில் உபயோகிக்கப்படும் மின்சார மற்றும் நீர் கட்டணமாக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 1,000 அறவிடப்படுவதுடன் பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பாடநெறி ஆரம்பத் திகதியன்று அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் இக் கட்டணத்தை செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| பகுதி | காலம் | நடைபெறும் இடம் | வதிவிடம் | உணவு / பானம் |
|---|---|---|---|---|
| 1 | 2 வாரம் | அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவை முழுநேர வதிவிடப் பாட நெறி | வழங்கப்பட மாட்டாது | வழங்கப்பட மாட்டாது |
| 2 | 5 வாரம் | வெளிக்களத்தில் அமைந் துள்ள பிரதேச நில அளவை காரியாலயத் துடனான நடை முறைப் பயிற்சி | வழங்கப்பட மாட்டாது | வழங்கப்பட மாட்டாது |

7. பாடநெறி சிங்களம் /தமிழ் மொழிகளில் நடாத்தப்படும்.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் ஒழுங்கின் பிரகாரம் தகுதியானவர்கள் நேர்முகப்பரீட்சை மூலமாக தெரிவு செய்யப்படுவர்.

9. ஆவணங்களினதும், சான்றிதழ்களினதும் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தமது தகைமைகளை நிரூபிப்பதற்குத் தேவையானதும் ஏற்கக்கூடியதுமான ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின்போது வழங்கத்தவறும் விண்ணப்பதாரிகள் தகைமையற்றவராகக் கருதப்படுவர்.

10. சகல ஆவணங்களினதும் நம்பகத்தன்மைக்கு விண்ணப்ப தாரியே முழுப் பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மையை உறுதி செய்யத் தவறும் ஆவணங் களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. இப்பயிற்சிக் காலம் முடிவடைந்த பின்னர் பயிற்சி பெற்றுக் கொண்டவர்களின் திறமையினை மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நியமிக்கும் அதிகாரிகளினால் பரீட்சிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிக்கு முன்னரான மதிப்பீடு மற்றும் இறுதியான மதிப்பீட்டிலும் தேர்ச்சி பெறும் பயிலுநர்களுக்காக மாத்திரம் அவர்களின் அறிவு மட்டத்திற்கேற்ப தேசிய தொழில்சார் தகைமை (NVQ Level) குறிப்பிடப்பட்ட சான்றிதழினை இலங்கை நில அளவைத் திணைக்களம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு ஆகியன இணைந்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

12. இவ்வர்த்மானியில் குறிப்பிடப்பட்டுள்ள 2015 ஆம் ஆண்டில் நடத்தப்படுவதற்குரிய இப்பாடநெறியை நடாத்துதல் ஒரு பாடநெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர் தொகை அல்லது வருடத்தினுள் நடாத்தப்பட வேண்டிய பாடநெறிகளின் தொகை போன்றவை குறித்த தீர்மானங்கள் நில அளவையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

பி. எம். பி. உதயகாந்த,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்ளம்,
த.பெ. இல. 506,
கொழும்பு 5.
www.survey.gov.lk
2015, சனவரி 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர்களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 2/3/4 (NVQ level 2/3/4) பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2015 கல்வியாண்டு**

1. பாடநெறியின் பெயர் :----.
2. பாடநெறிக் குறியீட்டு இலக்கம் :----.
3. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
4. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.
5. நிரந்தர முகவரி :----.
6. தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :----.
மின்னஞ்சல் :----.
7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. மாவட்டம் :----.
தேர்தற் தொகுதி :----.
பிரதேச செயலாளர் பிரிவு :----.
கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
9. பிறந்த திகதி (2014.10.15 ஆந் திகதியன்று வயது )

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

10. பால் (ஆண்/பெண்) :----.
11. சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான தகைமைகள் வர்த்தமான அறிவித்தலுக்கமைய நீங்கள் பெற்றுள்ள தகைமைகள் :

பாடநெறியில் நுழைவதற்கான தகைமைகள் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

பெற்றுள்ள NVQ பாடநெறி பயின்ற சேவைக் காலம் சான்றிதழின் பெயர், நிறுவனத்தின் பெயர், அனுபவம் இருப்பின் அதுபற்றிய விபரம் (சுருக்கமாக வருடம், மாதம். ) :

12. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. ப. (சா. த.) பரீட்சை பெறுபேறுகள் (இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில்) :

| பரீட்சை சுட்டிலக்கம் | பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

(ஆ) க. பொ. த (உயர்தரம்) பரீட்சைக்கு தோற்றி இருப்பின் அதன் பெறுபேறுகள் :

| பரீட்சை சுட்டிலக்கம் | பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

13. இதற்கு முதலில் NVQ பாடநெறியினைப் பயின்றிருந்தால் அது பற்றிய விபரங்கள் :----.
பாடநெறியின் இலக்கம்/குறியீடு :----.
NVQ தகைமை பட்டம் :----.
நிறுவனம் :----.

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.-** இப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு உட்பட்ட வரையில் உண்மையானவை எனவும், விண்ணப்பித்துள்ள பாடநெறிக்குத் தேவையான தகைமைகள் எனக்குண்டு என்றும் இத்தால் உறுதி செய்கின்றேன். மேலும் இப்பாடநெறி தொடர்பான அனைத்து சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு நடப்பேன் என்றும் நில அளவையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது என்றும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(20 ரூபா பெறுமதியான முத்திரையின் மீது கையொப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும் ).

திகதி :----.

2-301

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

***2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***

***"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"***

***(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)***

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

*11.* ***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

***12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

***13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.***

***14. 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

***முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.***

***தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்***

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2015**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 06.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.01.2015 |
| | | வெள்ளி | 13.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.01.2015 |
| | | வெள்ளி | 20.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.02.2015 |
| | | வெள்ளி | 27.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.02.2015 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 06.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.02.2015 |
| | | வெள்ளி | 13.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.02.2015 |
| | | வெள்ளி | 20.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.03.2015 |
| | | வெள்ளி | 27.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.03.2015 |
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 02.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.03.2015 |
| | | வெள்ளி | 10.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.03.2015 |
| | | வெள்ளி | 17.04.2015 | .. | நண்பகல் 12 | வியாழன் | 02.04.2015 |
| | | வெள்ளி | 24.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.04.2015 |
| | | வியாழன் | 30.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.04.2015 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.